[1993 மார்ச் 15

திரு. குருசாமி என்கிற அண்ணாதாசன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரையிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவெறும்பூர் தொகுதியிலிருந்து தொடர்ந்து இரு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு மிகச் சிறிய முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்).

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) பம்பாயில் வெடிகுண்டுச் சம்பவத்தில் உயிரிழந்தோர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பம்பாய் நகரில் நடந்த இரக்கமற்ற வெடிகுண்டுச் சம்பவத்தால் உயிரிழந்தவர்களுக்கான இரங்கல் தீர்மானத்தை, பேரவையின் ஒப்புதலோடு பேரவைமுன் வைக்கிறேன்.

''பம்பாய் நகரில் கடந்த 12-3-1993 வெள்ளிக்கிழமை அன்று கேந்திரமான பல இடங்களிலும் மாடிக்கட்டிடங்களிலும் பயங்கரமான வெடிகுண்டுகளை நாச சக்திகள் சில வெடிக்கச் செய்து பேரழிவை உண்டாக்கி, 300-க்கும் அதிகமான உயிர்ச் சேதங்களை உண்டாக்கிய சோகச் செய்தி அறிந்து இப்பேரவை பெரிதும் அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறது. இந்திய நாடு முழுவதும் அதிர்ச்சிஅடையச் செய்யத்தக்க வகையில் நடைபெற்ற கொடிய மனிதாபிமானமற்ற கொலைவெறிச் செயலுக்கு இப்பேரவை தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இக்கொடிய செயலுக்குக் காரணமான அனைத்து நாச சக்திகளையும் கண்டறிந்து கூண்டோடு அவற்றை அழித்தொழிக்க வேண்டுமென மத்தியப் பேரரசையும் மராட்டிய மாநில அரசையும் இப்பேரவை கேட்டுக்கொள்கிறது.

1993 மார்ச் 15] [பேரவைத் தலைவர்]

இக்கொடிய வெடிகுண்டு விபத்தால் நூற்றுக்கணக்கில் தங்கள் இன்னுயிரை இழந்துவிட்ட அப்பாவி மக்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும், ஆயிரத்திற்கும் அதிகமாகப் படுகாயமுற்று பரிதவிப்பிற்கு ஆளாகியுள்ளோருக்கும், பெரும் சேதத்திற்கு ஆளாகியுள்ள பம்பாய் மக்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.''

இந்த இரங்கல் தீர்மானத்தை ஏற்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்).

முற்பகல் 10-05

(ஆ) முன்னாள் பேரவைத் தலைவர் திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்கள் மறைவு மற்றும் முன்னாள் அமைச்சர் திரு.அன்பில் பெ. தர்மலிங்கம் அவர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் பேரவைத் தலைவர் திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்கள் 18-2-1993 அன்றும் மற்றும் முன்னாள் அமைச்சர் திரு. அன்பில் பெ. தர்மலிங்கம் அவர்கள் 5-3-1993 அன்றும் மறைந்த செய்தியை இப்பேரவைக்கு வருத்தத் துடன் தெரிவித்துக் கொள்கிறேன், இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானங்களை முன் மொழிவார்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1952ஆம் ஆண்டு முதல் 1957ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவி தொகுதியிலிருந்தும், 1962ஆம் ஆண்டு முதல் 1967ஆம் ஆண்டு வரை திருநெல் வேலி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியிலிருந்தும் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப் பினராகவும், 1962ஆம் ஆண்டு முதல் 1967ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தலைவராகவும் விளங்கி பேரவையின் மரபுகளையும், கண்ணியத்தையும் கட்டிக் காத்தவர் என்று அனைவராலும் போற்றத்தக்க வகையில் பணியாற்றிய திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்கள் 18-2-1993ஆம் நாளன்று மறைந்தமை குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்து கொள்கிறது'' என்ற தீர்மானத்தையும்,

*6